**Property of HoustonTamilCatholicCommunity (HTCC)**



# Houston Tamil Catholic Community (HTCC)



# சிலுவைப்பாதை
# STATIONS OF THE CROSS

## திருச்சிலுவைப் பாதை தொடக்க செபம்

**முதல்வர்:** பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே, ஆமென்!
**எல்லோரும்:** இரக்கத்த்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவு கூறுகின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரை பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச் சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

**சுருக்கமான உத்தம மனஸ்தாப செபம்:**
என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகின்றேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன். எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக, இறைவா என்மேல் இரக்கமாயிரும்.

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மாதாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

*பழிகளை சுமத்தி பரிகசித்தார் - உயிர்*
*பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Opening Prayer

**Leader:** In the name of the Father, and of the Son, and of the Holy Spirit. Amen.
**Leader:** We beseech Thee, O Lord! to assist and direct our actions by Thy powerful grace, and all our prayers and works may always begin and end with Thee. Through Christ our Lord. Amen.

**All:** O Jesus, treasure of my soul, infinitely good, infinitely merciful, behold me prostrate at Thy sacred feet! Sinner as I am, I fly to the arms of Thy mercy, and implore that grace which melts and converts - the grace of true compunction. I have offended Thee, adorable Jesus! I repent; let the favor of my love equal the baseness of my ingratitude. This Way of the Cross, grant me to offer devoutly in memory of that painful journey Thou hast travelled for our redemption, to the Cross of Calvary, with the holy design to reform my morals, amend my life and gain these indulgences granted by Thy vicars on earth. I apply one for my miserable soul, the rest in suffrage for the souls in purgatory, particularly N.N. [Here mention the souls for whom you intend to apply them] I begin this devotion under Thy sacred protection, and in imitation of Thy dolorous Mother. Let then this holy exercise obtain for me mercy in this life, and glory in the next. Amen.

*Through her heart, His sorrow sharing,*
*All His bitter anguish bearing,*
*Now at length the sword had passed.*

## முதல் நிலை

## இயேசு நாதரைச் சாவுக்குத் தீர்வையிடுகிறார்கள்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** இயேசு, தந்தையின் அன்பில் நம்பிக்கை கொண்டு, பிறருக்கு அநீதம் இழைத்த யூத சங்கத்தினரையும், அவர்களின் அறிவுசார்ந்த நடைமுறைத் திட்டங்களையும் எதிர்த்தார். அதனால் அவருக்கு நேர்ந்த அநீதத்தை ஏற்றுக் கொண்டார். நாமும் அவ்வாறே செய்வோம். ஏனெனில் மீட்படையவும் இறையரசு வளரவும் இதுவே வழி. அநீதத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டதில் அர்த்தம் உள்ளது, ஆதாயம் உள்ளது என்கிறார் இயேசு. நம் அறிவுக்கு இது புரியாது. புரிந்து கொள்ளக்கூடியவை மட்டுமே உண்மை என நினைக்காதே! "நான்தான் உண்மை" என்கிறார் இயேசு. இந்த உண்மையை நிலைநாட்ட தந்தையின் விருப்பப்படிசிலுவை மரத்தில் நம்பிக்கை வைக்கின்றார். எனவே சிலுவை நம்பிக்கையின் சின்னமாய் விளங்குகிறது.

**செபம்:** எங்கள் அன்பு இயேசுவே! யாதொரு குற்றமோ பாவமோ அறியாத உம்மைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். வாழ்வும், வழியும், உண்மையுமான உம்மையே நாங்கள் பின்பற்றவும், தவறான தீர்ப்பு வழங்காதிருக்கவும் எங்களுக்கு அருள்தாரும். ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*தாளாச் சிலுவை சுமக்க வைத்தார் - உம்மை*
*மாளாத் துயரால் துடிக்க வைத்தார்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## First Station

## Jesus Is Condemned to Death.



**Leader**: We adore You, O Christ, and we praise You.

**All**: Because by Your holy Cross, You have redeemed the world.

**Leader**: Jesus, the most innocent of beings, is condemned to death, yes, to the shameful death of the cross. In order to remain a friend of Caesar, Pilate delivers Jesus into the hands of His enemies. O fearful crime, to condemn Innocence to death and to displease God in order to please men.

**All**: O innocent Jesus, I have sinned and I am guilty of eternal death; / but that I may Live, / Thou dost gladly accept the unjust sentence of death. / For whom then shall I henceforth live / if not for Thee, my Lord? / If I desire to please men, / I cannot be Thy servant. / Let me, therefore, rather displease the whole world / than not please Thee, O Jesus!

**Leader**: Lord Jesus, crucified

**All**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*O, how sad and sore distressed*
*Was that Mother, highly blest,*
*Of the sole begotten One!*

## <u>இரண்டாம் நிலை</u>

### இயேசு நாதரின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.



<u>முதல்வர்:</u> திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**<u>அனைவரும்:</u>** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

<u>முதல்வர்:</u> உலகில் மனிதர்கள் ஒருவர்மீது ஒருவர், பகைமைகளைச் சுமத்தி வேதனைப் படுத்துகிறார்கள். ஆனால் இயேசுவோ, நம்மை வேதனைகளிலிருந்தும் பாவச்சுமைகளிலிருந்தும் விடுவிக்க சிலுவை வடிவில் அவர்மேல் சுமத்தப்பட்ட நம் பாவச்சுமையை, வேதனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றார். மனிதர் மட்டில் தந்தையாம் இறைவனின் அன்பும், இயேசுவின் அன்பும், தூயஆவியின் அன்பும் இங்கு சிலுவையில் சங்கமமாகிறது. மனுக்குலத்தின் ஜென்மபாவம் இங்கு இயேசுவால் சிலுவையில் சுமந்து தீர்க்கப்படுகிறது. அப்பேற்பட்ட புனிதமான அன்பையும் தியாகத்தையும் சுமந்ததினால் சிலுவை அன்பின் சின்னமாகத் திகழ்கின்றது.

<u>செபம்:</u> அன்பு இயேசுவே! உம்மேல் சுமத்தப்பட்ட சிலுவை எங்கள் பாவங்களின் விளைவு என்பதை உணர்கின்றோம். யார்மீதும் அநியாயமாகப் பழி சுமத்தாமல் இருக்கவும், எங்கள் வாழ்வில் வருகின்ற துன்பங்கள் என்னும் சிலுவையைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்தாரும். ஆமென்!

**<u>அனைவரும்:</u>** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*விழுந்தீர் சிலுவைப் பளுவோடு - மீண்டும்*
*எழுந்தீர் துயர்களின் நினைவோடு*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## <u>Second Station</u>

### Jesus carries his Cross.



**<u>Leader</u>**: We adore You, O Christ, and we praise You.

**<u>All</u>**: Because by Your holy Cross, You have redeemed the world.

**<u>Leader</u>**: When our divine Redeemer beheld the Cross, He most willingly reached out to it with His bleeding arms. He embraced it lovingly, kissed it tenderly, took it on His bruised shoulders, and, exhausted as He was, He carried it joyfully.

**<u>All</u>**: O my Jesus, /I cannot be Thy friend and follower if I refuse to carry my cross. /O beloved cross, / I embrace Thee, / I kiss Thee, / I joyfully accept Thee /from the hand of my God. / Far be it from me to glory / in anything save in the Cross of my Lord and Redeemer. / By it the world shall be crucified to me, / and I to the world, /that I may be Thine forever

**<u>Leader</u>**: Lord Jesus, crucified

**<u>All</u>**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Christ above in torment hands:*
*She beneath beholds the pangs*
*Of her dying glorious Son*

## மூன்றாம் நிலை

## இயேசு நாதர் சிலுவையின் பாரத்தால் முதல் முறை தரையில் விழுகிறார்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** நிற்பவன்தான் வீழ்ந்தவனைத் தூக்கி நிறுத்தமுடியும் என்பது உலக நியதி. மனிதர்களாகிய நம்மைப் பாவப் படுகுழியிலிருந்தும், உடல் மன நோயிலிருந்தும், சாத்தானின் ஆதிக்கத்திலிருந்தும் நிரந்தரமாகத் தூக்கி நிறுத்த நம்மீது கொண்ட கனிவினால் தன் வீழ்தலை இயேசு ஏற்றுக் கொள்கிறார். இது தந்தையின் திட்டம் என்பதால், தனது வீழ்தல் சரியானதாகத்தான் இருக்கும் என் நினைத்து தன் கல்வாரிப்பயணத்தைக் கனிவோடு தொடர்கின்றார். இதனால் சிலுவை கனிவின் பண்பைக் கொண்டதாக மாறுகின்றது.

**செபம்:** அன்பு இயேசுவே! சிலுவையின் பாரத்தால் நீர் முகம் குப்புறக் கீழே விழுந்தீர். துன்ப துயரங்களின் சுமையால் வாடுகின்ற மக்களைக் கனிவோடு கண்ணோக்கிட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*தாங்கிட வொண்ணாத் துயருற்றே - உம்மைத்*
*தாங்கிய அன்னை துயருற்றாள்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Third Station

## Jesus falls the first time.



**Leader:** We adore You, O Christ, and we praise You.

**All:** Because by Your holy Cross, You have redeemed the world.

**Leader:** Carrying the Cross, our dear Savior was so weakened with its heavy weight that He felt exhausted to the ground. The Cross was light and sweet to Him, but our sins made it so heavy and hard to carry.

**All:** Beloved Jesus, Thou did carry the burden/ and the heavy weight of my sins. /Should I then not bear in union/ with Thee my light burden of suffering, / and accept the sweet yoke of Thy commandments? /Thy yoke is sweet and Thy burden is light. / I willingly accept it. / I will take up my cross and follow Thee

**Leader:** Lord Jesus, crucified

**All:** Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

.

*Is there one who would not weep,*
*Whelmed in miseries so deep,*
*Christ's dear Mother to behold*

## நான்காம் நிலை

### இயேசு நாதர் தமது புனித தாயாரைச் சந்திக்கிறார்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** என் தாயின் சந்திப்பு உணர்ச்சி வசப்பட்டதல்ல. எனது இந்த நிலைக்குக் காரணமானவர்களை அவர் தூற்றவில்லை. அவர் என் சீடராய் இருந்ததால், என் துன்பத்தில் தன்னடக்கத்தோடு பங்கேற்க வந்திருப்பதாகச் சொல்லவே வந்தார். தன்னைப்போல அநேக சீடர்கள் எனது பாடுகளில் பங்கேற்பதாகவும் சொன்ன செய்திதான் எனக்கு ஆறுதல் என நமக்குச் சொல்கின்றார். தன்னடக்கம் மிகுந்த தாய்மரியின் இந்தச் சந்திப்பினால், பிறருக்குப் பயன்தரக்கூடிய சிலுவைப்பயணத்தை இயேசுவும் முறுமுறுக்காமல், தன்னடக்கத்தோடு தொடர்கின்றார். எனவே, சிலுவை தன்னடக்கம் மிகுந்த கருவியாய் மாறுகிறது.

**செபம்:** அன்பு இயேசுவே! உம்மை ஈன்றெடுத்த அன்னை மரியா உம் துன்பங்களைக் கண்டு மனமுடைந்தார். அந்த அன்னையின் அரவணைப்பில் நாங்கள் என்றும் மகிழ்வுகொள்ள அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*மறுத்திட முடியா நிலையாலே - சீமோன்*
*வருத்தினார் தன்னை உம்மோடு*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Fourth Station

### Jesus meets His afflicted Mother.



**Leader**: We adore You, O Christ, and we praise You.

**All**: Because by Your holy Cross, You have redeemed the world.

**Leader**: How sad and how painful must it have been for Mary to behold her beloved Son laden with the Cross, covered with wounds and blood, and driven through the streets by savage executioners! What unspeakable pangs her most tender heart must have experienced! How earnestly did she desire to die instead of Jesus, or at least with Him!

**All**: O Mary, / I am the cause of the pains that pierced your hearts. / Would that my heart might experience some of your sufferings. / O Mother, / let me share in thy sufferings and those of they Son, / that I may obtain the grace of a happy death.

**Leader**: Lord Jesus, crucified

**All**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Can the human heart refrain?*
*From partaking in her pain*
*In that Mother's pain untold?*

## ஐந்தாம் நிலை

### இயேசு நாதர் சிலுவையைச் சுமப்பதற்கு சீமோன் உதவி செய்கிறார்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

முதல்வர்: தேவையிலும் துன்பநிலையிலும் இருப்பவர்களுக்கு உதவுவது சாதாரண மனிதரல்ல. உதவும் பண்பு தெய்வத்தினுடையது. சிமியோனிடமிருந்த உதவும் பண்பு நன்னயமாக இயேசுவுக்குக் கிடைக்கின்றது. மாபெரும் உலக மீட்பருக்கு உதவிய பெருமை சிமியோனுக்குக் கிடைக்கின்றது. ஆபிரகாமிடம் விருந்தோம்பல் பண்பு இருந்ததால் இறைவனுக்கே விருந்தளிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அன்பும் இரக்கமும் கொண்ட நன்னயத்தினால் அன்னை தெரேசாள், வின்சென்ட் தே பவுல் போன்றவர்கள் இறைவனில் பெருமையடைந்தார்கள். கல்வாரிப்பாதையில் நன்னயம் மிகுந்த சிமியோன், இயேசுவோடு சிலுவையைச் சுமந்ததால், சிலுவை நன்னயம் மிகுந்த கருவியாய் மாறியது.

**செபம்:** அன்பு இயேசுவே! கடின சிலுவையை நீர் சுமந்துசெல்ல சீமோன் என்பவர் துணைசெய்தார். எங்கள் சகோதரர் சகோதரிகளின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு, அவர்களின் சிலுவைப் பாரத்தைக் குறைத்திட எங்களுக்குத் துணைசெய்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*நிலையாய் பதிந்தது உம் வதனம் - அன்பின்*
*விலையாய் மாதின் சிறு துணியில்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Fifth Station

### Simon helps carry the cross.



**Leader:** We adore You, O Christ, and we praise You.

**All:** Because by Your holy Cross, You have redeemed the world.

**Leader:** Simon of Cyrene was forced to help our exhausted Savior carry His Cross. How pleased would Jesus have been, had Simon offered his services of his own accord. However, Simon was not invited by Christ as you are. He says: “Take up your cross and follow Me.” Nevertheless you recoil, and carry it grudgingly.

**All:** O Jesus, whosoever does not take up his cross and follow Thee, / is not worthy of Thee. / Behold, I cheerfully join Thee on the way of the cross. / I desire to carry it with all patience until death, / that I may prove worthy of Thee.

**Leader:** Lord Jesus, crucified

**All:** Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Bruised, derided, cursed, defiled*
*She beheld her tender Child*
*All with bloody scourges rent*

## ஆறாம் நிலை

### இயேசு நாதருடைய திருமுகத்தை ஒரு பெண் துடைக்கிறார்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** உரோமை வீரர்களின் அராஜகமான செயல்களையும், அஞ்சி நடுங்கக்கூடிய சூழ்நிலையையும் கடந்து ஒரு சாதாரண இளம்பெண் இயேசுவை அணுகி அவரது முகம் துடைக்கத் துணிகொடுத்து உதவ முடிந்ததென்றால், அது அவளது இதயத்தில் பொங்கி வழிந்த அன்பினால் தான். உண்மையான அன்பு உலகை வெல்லும், அது அறிவிற்கு அப்பாற்பட்டது. இதற்கு சாட்சிதான் வெரோணிக்காள். அவளது அன்பையும், அவளது துணிவையும் கண்ட இயேசு, அவள்மேல் பரிவு கொண்டு அவள் கொடுத்தத் துணியில் தன்முகத்தைப் பதித்து பரிசாகத் தருகின்றார். இங்கு சிலுவை பரிவின் சின்னமாய் மாறுகிறது.

**செபம்:** அன்பு இயேசுவே! வியர்வையாலும் இரத்தத்தாலும் கறைபட்ட உம் திருமுகத்தை ஒரு பெண்மணி அன்போடு துடைத்து உமக்கு ஆறுதலளித்தார். எங்கள் வீட்டிலும் நாட்டிலும் உலகிலும் கவலையால் வாடும் அனைவரின் துன்பங்களையும் துடைத்திட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததினால் - அந்தோ*
*சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Sixth Station

### Veronica offers her veil to Jesus.



**Leader**: We adore You, O Christ, and we praise You.

**All**: Because by Your holy Cross, You have redeemed the world.

**Leader**: Moved by compassion, Veronica presents her veil to Jesus, to wipe His disfigured face. He imprints on it His holy countenance, and returns it to her as a recompense. Shall Christ reward you in like manner? Then you too must do Him a service. But you do a service to Christ every time you perform a work of mercy towards your neighbor: for He says: “What you have done to the least of My brethren, you have done to Me.”

**All**: Dearest Jesus, what return shall I make Thee for all Thy benefits? / Behold, I consecrate myself entirely to Thy service. / My whole heart I give to Thee; / stamp on it Thy holy image, / that I may never forget Thee.

**Leader**: Lord Jesus, crucified

**All**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*For the sins of His own nation*
*Saw Him hang in desolation*
*Till His spirit forth He sent.*

## <u>ஏழாம் நிலை</u>

## இயேசு நாதர் சிலுவையின் பாரத்தால் இரண்டாம் முறை தரையில் விழுகிறார்.



<u>முதல்வர்</u>: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

<u>**அனைவரும்**</u>: அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

<u>முதல்வர்</u>: மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப் பட்டவன். விழுதல் என்பது மண்ணுக்கே உள்ள பலவீனம். இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆனாலும் விழுதலைக் குறித்து யாரும் மனம் சோர்ந்து போகக் கூடாது. விழுகின்ற போதெல்லாம் இடர்பாடுகளைப் பொறுமையுடன் ஏற்று, ஆவியின் தூண்டுதலால்
எழுதலுக்குச் செவிசாய்த்து, எழுந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். இயேசுவும் அவ்வாறே, இரண்டாம் முறை தரையில் விழுந்த போதும், பொறுமை காத்து, தூய ஆவியின் தூண்டுதலால் எழுந்து தன் இலட்சியப் பயணத்தைத் தொடர்கின்றார். பொறுமையோடு இயேசு சிலுவையைத் தொடர்ந்து சுமந்ததால், சிலுவை இலட்சியத்தை வென்றெடுக்கும் பொறுமையின் சின்னமாய் மாறுகிறது.

<u>**செபம்:**</u> அன்பு இயேசுவே! சிலுவையின் பாரம் உம் தோள்களை அழுத்தியதால் நீர் மீண்டும் ஒருமுறை கீழே விழுந்தீர். ஆனால் மன உறுதியோடு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தீர். நாங்களும் ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்டு துவழ்ந்துவிடாமல் துணிந்து எழுந்து, உம்மேல் நம்பிக்கைவைத்து முன்னேறிச் சென்றிட அருள்வீராக. ஆமென்!

<u>**அனைவரும்**</u>: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*விழிநீர் பெருக்கிய மகளிருக்கு - அன்பு*
*மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## <u>Seventh Station</u>

## Jesus falls the second time.



<u>**Leader**</u>: We adore You, O Christ, and we praise You.

<u>**All**</u>: Because by Your holy Cross, You have redeemed the world.

<u>**Leader**</u>: Overwhelmed by the weight of the Cross, Jesus falls again to the ground. But the cruel executioners do not permit Him to rest a moment. With thrusts and blows they urge Him onward. With what cruelty Jesus in treated and trampled under foot! Remember, compassionate soul, that your sins caused Jesus this painful fall.

<u>**All**</u>: Have mercy on me, O Jesus, / and help me never to fall into my former sins. / From this moment I will strive sincerely / never to sin again. / But Thou, O Jesus, strengthen me with Thy grace, / that I may faithfully carry out my resolution.

<u>**Leader**</u>: Lord Jesus, crucified

<u>**All**</u>: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*O sweet Mother! Fount of Love,*
*Touch my spirit from above*
*Make my heart with yours accord*

## <u>எட்டாம் நிலை</u>

### இயேசு நாதர் யூதப் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.



<u>முதல்வர்:</u> திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**<u>அனைவரும்:</u>** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

<u>முதல்வர்:</u> அறிவினால் இயக்கப்படும் மனிதர்கள் பலவீனமானவர்கள். மனிதன் எப்போதுமே நிறைவற்ற நிலையில்தான் இருக்கிறான். அவ்வாறு நிறைவற்ற நிலையிலுள்ள மனிதர்களின் ஆறுதல், இயேசுவுக்கு அந்த துயரமான நேரத்தில் தேவைப்படவில்லை. ஏனெனில், அதே மனிதம்தான் அவரைப் போற்றியும், தூற்றியும் சிலுவை மரணத்திற்குக் கையளித்தது. மனித உணர்வுசார்ந்த ஆறுதலில் பயனில்லை என்பதை உணர்ந்த இயேசு அமைதியோடு "உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" எனக்கூறி தன் சிலுவைப் பயணத்தைத் தொடர்கின்றார். சிலுவை, அமைதியின் சின்னமாய் மாறுகிறது.

**<u>செபம்:</u>** அன்பு இயேசுவே! உமக்கு நேர்ந்த சொல்லற்கரிய துன்பத்தையும் பாராமல் நீர் பிறருக்கு ஆறுதல் கூறினீர். தன்னலம் பாராது பிறர் நலம் நோக்கவும், துன்புறுவோருக்கு ஆறுதல் கூறவும் எங்களுக்கு நல்மனத்தைத் தந்து, தூய வழியில் நாங்கள் நடந்திட அருள்வீராக. ஆமென்!

**<u>அனைவரும்:</u>** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் - கால்*
*ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## <u>Eighth Station</u>

### Jesus speaks to the women.



**<u>Leader</u>**: We adore You, O Christ, and we praise You.

**<u>All</u>**: Because, by Your holy cross, You have redeemed the world.

**<u>Leader</u>**: Moved by compassion, these devoted women weep over our suffering Savior. But He turns to them and says: “Weep not for Me, but weep for yourselves and your children. Weep for your sins and those of your children; for they are the cause of My suffering.” You also must weep over your sins, for there is nothing more pleasing to our Lord and more useful to yourself than the tears you shed out of contrition for your sins.

**<u>All</u>**: O Jesus, / who shall give my eyes a torrent of tears, / that I may day and night weep over my sins? / I beseech Thee by Thy bitter and bloody tears / to move my heart, / so that tears may flow in abundance from my eyes, / and that I may weep over Thy sufferings / and over my sins until death.

**<u>Leader</u>**: Lord Jesus, crucified

**<u>All</u>**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Make me feel as You have felt*
*Make my soul to glow and melt*
*With the love of Christ, my Lord.*

## ஒன்பதாம் நிலை

**இயேசு நாதர் சிலுவையின் பாரத்தால் மூன்றாம் முறை தரையில் விழுகிறார்.**



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** மனிதநிலை இயேசுவை உள்ளம் சோரச்செய்து மண்ணில் சாய்க்கிறது. எழுந்து நடக்கத் தன் உடலில் எந்த சக்தியும் இல்லை. ஆனாலும் இயேசு எழுகிறார். தன் தந்தை மீதும், மனிதர் மீதும் கொண்ட அன்பினால் மீட்பின் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, மனிதரை முழுமையாக மீட்டெடுக்க வேண்டும் எனும் தூய ஆவியின் அறிவுறுத்தலினால் உறுதியடைந்து எழுகின்றார். எழமுடியாத நிலையிலிருந்து எழுந்ததில் அவருக்கு மகிழ்ச்சி. இன்னும் சிறிது தூரத்தில் கல்வாரியின் உச்சியை அடைந்துவிட முடியும் என்பதில் அவருக்கு மகிழ்ச்சி. இன்னும் சிறிது நேரத்தில் தனது இலட்சியப்பயணம் சிலுவை மரணத்தினால் முடிவடையப் போவதில் அவருக்கு மகிழ்ச்சி. இத்தனை மகிழ்ச்சிகளோடு இயேசு தன் சிலுவையைத் தொடர்ந்து சுமந்ததால் சிலுவை மகிழ்ச்சியின் சின்னமாய் மாறியது.

**செபம்:** அன்பு இயேசுவே! மீண்டும் மீண்டும் கீழே விழுந்ததால் உம் உடல் எல்லாம் இரத்தமயமாயிற்று. எங்கள் பாவங்களுக்காக நீர் நொறுக்கப்பட்டீர். எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் நாங்கள் தூய்மையோடு வாழவும், பாவத்தை வெறுத்து, உம் அன்பில் எந்நாளும் வளரவும் எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர் - இரத்த*
*மடைகள் திறந்திட மெய் நொந்தீர்*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Ninth Station

**Jesus Falls the Third Time.**



**Leader:** We adore You, O Christ, and we praise You.

**All:** Because, by Your holy cross, You have redeemed the world.

**Leader:** Exhausted at the foot of Calvary, Jesus falls for the third time to the ground. How painfully must have been reopened all the wounds of His tender body by these repeated falls. And how enormous must my sins be, to cause Jesus to fall so painfully. Had not Jesus taken my sins upon Himself, they would have plunged me into the abyss of Hell.

**All:** Most merciful Jesus, / I return Thee a thousand thanks / for not permitting me to die in my sins / and fall into the abyss of Hell, / as I have deserved so often. / Enkindle in me a sincere desire to amend my life. / Let me never again fall into sin, / but grant me the grace of final perseverance.

**Leader:** Lord Jesus, crucified

**All:** Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Holy Mother, pierce me through*
*In my heart each wound renew*
*Of my Savior crucified*

## பத்தாம் நிலை

### இயேசு நாதருடைய ஆடைகளைக் களைகிறார்கள்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** உடுத்த ஆடையில்லா ஏழை ஆடையின்மையை அவமானமாகக் கருதுவதில்லை. மனநோயாளி, தான் துன்புறுத்தப்படுவதையோ, காறி உமிழப்படுவதையோ, கேலி செய்யப்படுவதையோ அவமானமாகக் கருதுவதில்லை. சீடத்துவ வாழ்வில், அவமானங்களையும், கேலிப் பேச்சுக்களையும் கொள்கையோடும்
பொறுமையோடும் ஏற்றுக் கொள்ளும் பொழுது, இறைவனால் பல மனிதர்களை அவமானமடையாதபடி காப்பாற்ற முடியும். எனவேதான் இயேசு அந்த உச்சக்கட்ட அவமானத்தை ஒரு ஏழையைப் போல, ஒரு மனநோயாளியைப் போல எவ்வித பாதிப்புமின்றி ஏற்று நம்மையெல்லாம் அவமானத்திலிருந்து
காத்தார். சிலுவையின் பண்புகளாகிய தூய ஆவியின் ஒன்பது கனிகளும் அவரில் நிலைத்திருந்ததால் ஒரு செம்மறியைப் போல் கல்வாரியின் உச்சியில் நிற்கின்றார்.

**செபம்:** அன்பு இயேசுவே! உம் உடைகளைக் களைந்தவர்கள் உம்மை அவமானத்திற்கு உள்ளாக்கினார்கள். வறுமை, அரசியல் அடக்குமுறை, அதிகாரப்பாணி போன்ற அவலங்களால் மனித உரிமையும் மாண்பும் உரியப்பட்டு நிர்வாணமாக்கப்படுகின்ற எம் சகோதரர் சகோதரியரை நினைத்துப் பார்க்கின்றோம். உம் உடன்பிறப்புகளாகிய அவர்களது மாண்பினைக் காத்துப் போற்றிட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*பொங்கிய உதிரம் வடிந்திடவே - உம்மைத்*
*தொங்கிடச் செய்தார் சிலுவையிலே*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Tenth Station

### Jesus is stripped of His garments.



**Leader:** We adore You, O Christ, and we praise You

**All:** Because, by Your holy cross, You have redeemed the world.

**Leader:** Arriving on Calvary, Jesus was cruelly deprived of His garments. How painful the stripping must have been, because the garments adhered to His mangled body, so that in removing them parts of the flesh were torn away. Jesus is deprived of His garments that He may die possessed of nothing. How happy shall not I die after laying aside my evil habits and tendencies!

**All:** Help me, O Jesus, to amend my life. / Let it be renewed according to Thy will and desire. / However painful the correction may be to me, / I will not spare myself. / With the assistance of Thy grace, / I will refrain from all sinful pleasure and vain amusement, / that I may die happy and live forever.

**Leader:** Lord Jesus, crucified

**All:** Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Let me share with Thee His pain,*
*Who for all my sins was slain,*
*Who for me in torment died.*

## பதினொன்றாம் நிலை

### இயேசு நாதரை சிலுவையில் அறைகிறார்கள்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** மகளே! மகனே!! இதோ உன் பாவங்களையெல்லாம் சிலுவை வடிவில் கல்வாரி உச்சிவரை சுமந்து வந்திருக்கிறேன். இந்தப் பயணத்தில் நான் கற்றுத்தந்த தூய இயல்புகளை நீ வாழ்வாக்கு. என் கைகளும் கால்களும் சிலுவையில் வைத்து ஆணிகளால் துளைக்கப் பட்டதால், உன் பாவங்கள், சாபங்கள், நோய்கள், பிணிகள் அனைத்தும் என் உடலுக்குள் பாய்ந்த்திருக்கின்றன. இப்போது, சிலுவை என்ற இந்த அவமானச் சின்னம், புனிதமான விடுதலையின் சின்னமாக, மீட்பின் கருவியாக, அன்பின் சின்னமாக மாறியிருக்கிறது. சிலுவையை உன் வழ்வின் விடுதலைக்கு, வளர்ச்சிக்கு, சமாதானத்திற்குத் திறவுகோலாகப் பயன்படுத்திக்கொள். ஏனெனில், சிலுவை வழியாக நான் உன்னை மீட்டெடுத்திருக்கிறேன். சிலுவையில் என் இரத்தத்தை உன் விடுதலைக்கு விலையாகக் கொடுத்திருகிறேன். என் அன்பை உணர்ந்து வாழப்பழகு.

**செபம்:** அன்பு இயேசுவே! சிலுவையில் நீர் அறையப்பட்டபோது உம் கைகளையும் கால்களையும் ஆணிகளால் துளைத்தார்கள். உம் திருக்காயங்களால் நீர் எங்கள் காயங்களைக் குணமாக்கினீர். நீர் சிந்திய இரத்தத்தால் நாங்கள் கழுவப்பட்டுள்ளோம். அவமானச் சின்னமாகிய சிலுவையை நீர் மீட்பின் கருவியாக்கியது போல நாங்களும் எங்கள் துன்ப துயரங்களை உம் சிலுவையோடு இணைத்து உம் மீட்பின் பலன்களை இடைவிடாது துய்த்து அனுபவித்திட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*இன்னுயிர் அகன்றது உமை விட்டு - பூமி*
*இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Eleventh Station

### Jesus Is Nailed to the Cross.



**Leader**: We adore You, O Christ, and we praise You

**All**: Because, by Your holy cross, You have redeemed the world.

**Leader**: Stripped of His garments, Jesus is violently thrown down on the Cross. His hands and His feet are nailed to it in the cruellest way. Jesus remains silent, because it so pleases His heavenly Father. He suffers patiently, because He suffers for you. How do you act in sufferings and trials? How fretful and impatient, how full of complaints are you!

**All**: O Jesus, / meek and patient Lamb, / I renounce forever my impatience. / Crucify, O Lord, my flesh, / with its evil desires and vices. / Punish and afflict me in this life, / but spare me in the next. I resign myself altogether to Thy holy will. / May it be done in all things.

**Leader**: Lord Jesus, crucified

**All**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Let me mingle tears with thee,*
*Mourning Him who mourned for me,*
*All the days that I may live.*

## பன்னிரெண்டாம் நிலை

### இயேசு நாதர் சிலுவையில் உயிர் விடுகிறார்.



**முதல்வர்:** (திவ்விய இயேசுவே....)

**அனைவரும்:** (அதேனென்றால்....)

**முதல்வர்:** எல்லா நன்மைகளையும் உடைய இயேசு கிறிஸ்து, இரண்டு பாதகர்கள் நடுவிலே சிலுவையில் மரிப்பதைப் பார்த்து, அவரது அன்பின் மிகுதியையும், மதுரத் தன்மையையும், தியானிப்போமாக. அவர் தம் பிதாவை நோக்கி, தம்மை கொலை செய்கிறவர்களை பொறுத்தருளும் என்று கேட்கிறார். மனம்திருந்திய கல்லனைப் பார்த்து, இன்று நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று சொல்கிறார். தம் சீடனுக்கு தம் தாயாரை மாதாவாக ஒப்படைக்கிறார். பிதாவே, இதோ உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று உரத்த சத்தமிட்டு உயிரை விடுகிறார். உடனே உலகமெங்கும் அவரது தெய்வத் தன்மை அறிக்கையிடப் படுகிறது. சூரியன் இருளடைந்து, பூமி அதிர, கற்பாறைகள் பிளந்துபோக, உலகமெல்லாம் ஆண்டவர் மரிப்பதைப் பார்த்து துக்கத்தினால் அமிழ்ந்து போக விரும்புவதுபோல் தோன்றுகிறது.

**செபம்:** அன்பு இயேசுவே! வானத்திற்கும் பூமிக்கும் இடையே நீர் சிலுவையில் தொங்கினீர். மனிதரைக் கடவுளின் பிள்ளைகளாக்கிட நீர் எம்மில் ஒருவராக மாறினீர். சிலுவையில் தொங்கியபோது நீர் உரைத்த சொற்களை நினைத்துப் பார்க்கிறோம். “தாகமாயிருக்கிறது” என்று கூறிய இயேசுவே, எங்கள் ஆன்ம தாகத்தை வளர்த்தருளும். “எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி உயிர்நீத்த இயேசுவே, நாங்கள் கடவுளின் திருவுளத்தை இறுதிவரை நிலைத்து நின்று நிறைவேற்றிட அருள்தாரும். ஆமென்!

**(முழங்காலிட்டு செபம்)**

1. **விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே......**
2. **அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க....**
3. **தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்....**

**அனைவரும்:** (எங்கள் பேரில் தயவாயிரும்...)

*துயருற்றுத் துடித்தாள் உளம் நொந்து - அன்னை*
*உயிரற்ற உடலினை மடிசுமந்து*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Twelfth Station

### Jesus Dies on the Cross.



**Leader**: We adore You, O Christ, and we praise You

**All**: Because, by Your holy cross, You have redeemed the world.

**Leader**: Behold Jesus crucified! Behold His wounds received for love of you! His whole appearance betokens love. His head is bent to kiss you. His arms are extended to embrace you. His heart is open to receive you. Oh, what love! Jesus dies on the Cross, to preserve you from eternal death.

**All**: Most lovable Jesus, / who will grant that I may die for love of Thee? / I will endeavor to die to the world and its vanities / when I behold Thee on the Cross / covered with wounds and crowned with thorns. / Merciful Jesus, / take me into Thy wounded heart, / that I may despise all perishable things, / to live and die for Thee alone.

**(Kneel & Pray) Our Father, Hail Mary, Glory be.**

**Leader**: Lord Jesus, crucified

**All**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*By the cross with thee to stay;*
*There with thee to weep and pray*
*Is all I ask of thee to give*

## பதிமூன்றாம் நிலை

### இறந்த இயேசுவை அவரது தாயார் மடியில் அமர்த்துகிறார்கள்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** மகனே! மகளே!! எனது உலக வாழ்க்கையில் நான் தந்தையின் விருப்பப்படி பிறர்நலனில் அக்கறை கொண்டே வாழ்ந்தேன். அப்படி என் அன்பினால் நன்மை அடைந்தவர்கள்தான் என்னை சிலுவையிலிருந்து இறக்கி, என் தாயின் மடியில் கிடத்தி, எனது இறுதிச்சடங்கில் நான் அநாதையல்ல என்பதையும், பிறர்நலனில் அக்கறை கொள்பவர்கள் என்றுமே அநாதைகள் அல்ல என்பதையும் நிரூபித்தார்கள். பிறருக்காக வாழாமல் தன்னலத்தோடு வாழ்பவர்கள்தான் அநாதைகள். பிறர் உதவியையோ, அன்பையோ பெறத் தகுதியற்றவர்கள். எனது உலகவாழ்க்கை உனக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். எப்பொழுதும், தூயஆவியின் கனிகளான ஒன்பது பண்பிலும் நிலைத்திரு. அதுவே நீ மறு கிறிஸ்துவாக்கப் பட்டதற்கு அடையாளம். உன்னைப்போல் உன் அயலானையும் நேசி என்பதே, என் அடக்கத்திற்குமுன் நான் உனக்குக் கூறும் செய்தி.

**செபம்:** அன்பு இயேசுவே! உயிரற்ற உம் சடலத்தை உம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தி அழுது புலம்பினார். அவரை எங்களுக்கு அன்னையாக அளித்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள்மேல் கொண்ட எல்லையற்ற அன்பினால் நீர் எங்களுக்காக உயிர்துறந்தீர். உமது சாவு எங்களுக்கு வாழ்வு வழங்கிற்று. நாங்களும் உமது புகழ்ச்சிக்காகவும் பிறருடைய ஈடேற்றத்திற்காகவும் அயராது உழைத்திட அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

*ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு - நீர்*
*அடங்கிய கல்லறை உமதன்று*
*எனக்காக இறைவா எனக்காக*
*இடர்பட வந்தீர் எனக்காக*



## Thirteenth Station

### Jesus Is Taken Down from the Cross.



**Leader:** We adore You, O Christ, and we praise You

**All:** Because, by Your holy cross, You have redeemed the world.

**Leader:** Jesus did not descend from the Cross, but remained on it till His death. When taken down, He rested on the bosom of His beloved Mother as He had so often done in life. Persevere in your good resolutions, and do not flee from the cross. For he who perseveres till the end shall be saved. Consider, moreover, how pure the heart should be that receives the body and blood of Jesus Christ in the adorable Sacrament of the Altar.

**All:** O Lord Jesus crucified! / I most earnestly entreat Thee: / Help me do what is right / and let me not be separated from Thy Cross, / for on it I desire to live and to die. / Create in me, O Lord, a clean heart, / that I may worthily receive Thee in Holy Communion, and that Thou mayest remain in me, / and I in Thee, / for all eternity.

**Leader:** Lord Jesus, crucified

**All:** Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!

*Virgin of all virgins best,*
*Listen to my fond request:*
*Let me share thy grief divine.*

## பதினான்காம் நிலை

### இயேசு நாதரைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.



**முதல்வர்:** திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச் சிலுவையாலே உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**முதல்வர்:** மகனே! மகளே!! இருள் வாழ்விலிருந்து அருள் வாழ்விற்கு உன்னை மீட்டெடுக்கவே மனிதனாய்ப் பிறந்து, மனிதன் எப்படி வாழ வேண்டுமென்பதை உனக்குக் கற்றுக் கொடுத்தேன். உன் பாவக்கட்டிலிருந்து உன்னை விடுவிக்க சிலுவை வழியாக உன் பாவங்களையெல்லாம் சுமந்து என் உடலில் ஏற்றுக் கொண்டேன். நான் சுமந்த சிலுவையை உனக்கு விடுதலையின் சின்னமாக, மீட்பின் சின்னமாக, நம்பிக்கையின் சின்னமாக, அன்பின் கருவியாக உனக்கு விட்டுச் செல்கிறேன். எப்பொழுதெல்லாம் சிலுவையை நம்பி நீ செயல்படுகின்றாயோ, அப்பொழுதெல்லாம் என் அன்பின் வல்லமையால் நீ ஆசீர்வதிக்கப்படுகிறாய், விடுதலை பெறுகிறாய், சமாதானம் பெறுகிறாய். சிலுவை என்பது அன்றாடம் நீ கடைப்பிடித்து நிலைத்திருக்க வேண்டிய தூயஆவியின் கனிகளான நம்பிக்கை, அன்பு, கனிவு, தன்னடக்கம், நன்னயம், பரிவு, பொறுமை, அமைதி, மகிழ்ச்சி என்னும் ஒன்பது பண்புகளுமேயாகும். இந்த அர்த்தத்தில்தான் "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் அன்றாடம் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின் செல்லட்டும்" எனக் கூறினேன். எனவே, மகனே! மகளே!! சிலுவை ஒரு சுமையல்ல, அது உன் வாழ்க்கை. உனக்கு வாழ்வு கொடுத்ததில் எனக்கு மகிழ்ச்சி... நிம்மதி... பாவத்திற்கு என்னோடு இறந்த நீ, புத்துயிர் பெற்று என்னோடு உயிர்த்தெழு!!!

**செபம்:** அன்பு இயேசுவே! உமது உடல் கல்லறையில் வைக்கப்பட்டாலும் மண்ணோடு மண்ணாகி அழிந்து போகவில்லை. நாங்களும் திருமுழுக்கின் வழியாக உம்மோடு கல்லறையில் அடக்கப்பட்டோம். பாவத்திற்கு இறந்தோம். ஆனால், நீர் புத்துயிர் பெற்று எழுந்தது போல எங்களுக்கும் ஆன்மீக வாழ்வு அளித்து, புதிய மனிதர்களாக வாழ நீர் வழிசெய்தீர். யாம் பெற்ற வாழ்வு இவ்வையகம் பெற்று மகிழ்ந்திட அருள்வீராக. ஆமென்!

**அனைவரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும். மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.



## Fourteenth Station

### Jesus Is Laid in the Sepulchre.



**Leader**: We adore You, O Christ, and we praise You

**All**: Because, by Your holy cross, You have redeemed the world.

**Leader**: The body of Jesus is laid in a stranger’s tomb. He Who in this world had not whereon to rest His head, would have no grave of His own after death. You whose heart is still attached to this world, despise it that you may not perish with it.

**All**: O Jesus, * Thou hast singled me out from the world, * what then shall I seek in it? * Thou hast created me for Heaven, * what then shall I desire upon earth? * Depart from me, deceitful world, with thy vanities! Henceforth I will walk the way of the Cross * traced out for me by my Redeemer, * and journey onward to my heavenly home, * where my rest and my joy shall be forever.

**Leader**: Lord Jesus, crucified

**All**: Have mercy on us, O Lord! Have mercy on us. May the souls of the faithful departed, through the mercy of God, Rest in Peace!